தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 003/ ந/2020
நாள். 29.12.2021

திரு. வி.அன்பழகன்,
பூந்தமல்லி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர் மற்றும்
பொறியாளர்,
பல்லாவரம் நகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

சென்னை மாவட்டம், பூந்தமல்லி, மல்லியம் நரசிம்மன் நகர், 13/9 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வி.அன்பழகன் என்பவரின் 31.12.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 003/2020 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மாவட்டம், பூந்தமல்லி, மல்லியம் நரசிம்மன் நகர், 13/9 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வி.அன்பழகன் என்பவர் தனது மனுவில்

2) காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரம் பெரு நகராட்சியின் 42 வார்டுகளில், வார்டு எண்.11,14,15 ஆகிய வார்டுகள் மற்றும் பாலாறு வீட்டு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படாத சில பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய, 2016-17ம் ஆண்டிற்கு மன்ற தீர்மானம் எண்.425 நாள்.29.02.2016ன்படி அனுமதி அளிக்கப்பட்டு, ந.க.எண்.6767/2016/இ2 நாள்.01.03.2016ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் பாண்டியனுக்கு மன்ற தீர்மானம் 513 நாள் 03.03.2016, ந.க.எண்.6767/2016/இ2 நாள்.03.03.2016ன்படி 2016-17ம் ஆண்டிற்கு ரூ.39 இலட்சத்துக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்த காலம்

முடிந்த பிறகு எவ்வித ஒப்பந்த நீட்டிப்பு ஆணையும் / மன்ற அனுமதியும் இல்லாமல் தொடர்ந்து 2017-18ம் ஆண்டிற்கு பணி செய்ய, பாண்டியனுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, ரூ.182 இலட்சம் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தவிதிகளை மீறி, ஒப்பந்தகாலம் முடிந்த பின்னரும், எவ்வித ஆணையும் இல்லாமல் பணி தொடர வாய்ப்பளித்து ஒப்பந்ததாரருக்கு ஆதாயம் தரும் நோக்கில் செயல்பட்டது ஒப்பந்தவிதிகளுக்கு முரணான செயலாகும்.

ஒப்பந்தபுள்ளி ரூ.39 இலட்சத்தில் ஒரு ஆண்டுக்கு முதலில் ஒப்பந்தம் கோரப்பட்டு, தொடர் நீட்டிப்பு, தொடர் செலவினமாக 2017-18 ஆம் ஆண்டிற்கு மட்டும் ரூ.1,81,90,740/- வரை செலவின அனுமதி அளித்தது ஒப்பந்த விதிகளுக்கு முரணானதாகும். 2017-18ல் பாண்டியனுக்கு டெண்டர் விதிமுறைகளை மீறி, சட்டத்துக்கு புறம்பாக அனுமதி அளிக்கப்பட்டதில் நகராட்சி ஆணையராக இருந்த சிவக்குமார், பொறியாளர் கருப்பையா ராஜா இருவரும் ஒப்பந்ததாரர் பாண்டியனிடம் ரூ.50 இலட்சம் வரை இலஞ்சமாக பெற்றுள்ளார்கள். பணி உத்திரவு ஒராண்டிற்கு வழங்கப்பட்டு, பிறகு அனுமதியற்ற நிலையில் தொடர் செலவினமாக 2017-18ல் ஆண்டிற்கு மொத்த செலவினம் ரூ.182 இலட்சமாகும். அரசாணை எண்.44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.12.2016ன்படி ரூ.100 இலட்சத்திற்கு மேல் செலவினத்திற்கு தலைமை பொறியாளர் (சி இ நகராட்சி நிர்வாக ஆணையரகம்) தொழில் நுட்ப அனுமதி பெறப்படவேண்டும். ஆனால் நகராட்சி பொறியாளர் கருப்பையா ராஜாவே இதற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளார். இது அரசாணையை மீறிய செயலாகும்.

குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்யும் டெண்டரில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையில் பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளது. ஆவடி பெரு நகராட்சி ஆணையராக இருந்த மதிவாணன், தனக்கு பதவி உயர்வு வேண்டாம் என்று அரசிடம் கடிதம் கொடுத்து அரசாணை கொடுத்தார் பதவி உயர்வு வேண்டாம் என்று குடிநீர் லாரி முறைகேட்டில், சிக்கியுள்ள ஆணையராக இருந்த சிவக்குமாரிடம் ரூ.25 இலட்சம் பணம் வாங்கிக் கொண்டுதான் மதிவாணன் கொடுத்தார். மதிவாணனுக்கு பதவி உயர்வு நிறுத்தி, அரசாணை எண்.(டி) 180/19.04.2018 வெளியானதின் பேரில் சிவக்குமாருக்கு பதவி உயர்வு கிடைத்து, திருப்பூர் நகராட்சி ஆணையராக மாறுதல் செய்யப்பட்டார்.

தற்போது, பல்லவபுரம் பெரு நகராட்சி ஆணையராக இருக்கும் மதிவாணனுக்கு, பல்லவபுரம் நகராட்சி ஆணையராக இருந்த சிவக்குமாருக்கும் நெருக்கம் அதிகம். அதனால் குடிநீர் லாரி சப்ளை தொடர்பான முறைகேடு தொடர்பான கோப்பை அதாவது கோப்பு எண்.6767/2018/இ2வை, தன் அலுவலக உதவியாளர் பார்த்திபன் மூலம் தீயிட்டு அழித்துவிட்டதாக தெரிகிறது. குடிநீர் லாரி சப்ளை ஊழல் தொடர்பாக ஆணையராக இருந்த சிவக்குமார், பொறியாளராக இருந்த கருப்பையாராஜா, கோப்புகளை அழித்த தற்போதைய நகராட்சி ஆணையர் மதிவாணன், ஒப்பந்ததாரர் பாண்டியன் ஆகியோர் மீது உரிய விசாரணை நடத்தி, ஒழுங்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

3) இம்மனு தொடர்பான தமது அறிக்கையை அனுப்பி வைக்குமாறு பல்லாவரம் நகராட்சி ஆணையாளரை 07.01.2020 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்டது. திரு.மு.கருப்பையா ராஜா பொறியாளர் (ஆணையாளர் பொறுப்பு) பல்லவபுரம் நகராட்சி அவர்கள் தமது 03.02.2020 நாளிட்ட அறிக்கையில்:-

- பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளில், வார்டு எண்.11,14 மற்றும் 15 ஆகிய வார்டுகள் மேட்டுபாங்கான பகுதிகளாக, பாலாறு வீட்டு குடிநீர் விநியோக குழாய் இல்லாத பகுதிகள் மற்றும் நிலத்தடி நீரில்லாத வறட்சியான இப்பகுதிகளுக்கு (unserved areas) கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறையினை போக்கும் விதத்தில் தனியார் வாடகை லாரிகள் குடிநீர் விநியோகம் செய்யப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் மற்றும் கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறையை போக்க லாரி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பணிக்கு 2016-17ம் நிதியாண்டிற்கு நகரமன்ற தீர்மானம் எண்.425 நாள்.29.02.2016ல் மதிப்பீட்டு ரூபாய்.39.00 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகரமன்றத்திற்கு பொருள் கொண்டு செல்லப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆ.பாண்டியன் ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தீர்மானம் எண்.544 நாள்.03.03.2016ல் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

- இவ்வாறிருக்க நகரமன்றத்தின் பதவிக்காலம் 26.10.2016ம் தேதியில் முடிவடைந்த நிலையில், பொது மக்களுக்கு குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையினைகருத்திற்கொண்டு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்படுவதினால் ஏற்படும் காலதாமதம் மற்றும் வழங்கப்படும் ஒப்பந்தவிகிதத்தில் ஏற்படும் உயர்வினை கருத்திற்கொண்டு, நகராட்சி ஏற்படும் நிதிச்சுமையினை குறைக்கும் பொருட்டு, 2016-17 ம் ஆண்டு வழங்கப்பட்ட அதே விலைவிகிதத்தில் 2017-18 ஆண்டிலும் பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டது.

- 2017-18 ம் நிதியாண்டிற்கு, 2016-17 ம் ஆண்டிற்கு இப்பணி மேற்கொண்ட அதே ஒப்பந்ததாரரை கொண்டு அதே விலை விகிதத்தில் பணி செய்ய ஒப்பந்ததாரர் வழங்கிய சம்மதத்தின் அடிப்படையில் உரிய நகரமன்ற அனுமதியுடன் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி மேற்கொள்ளப்படுவதற்கு உரியவாறு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று மன்றத்திற்கு பொருள் கொண்டு செல்லப்பட்டு அதனடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டது.

- 2017-18 ம் ஆண்டில் பருவ மழை பொய்த்ததின் காரணமாக, பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட வேண்டியதன் அவசர அவசியம் கருதி நகராட்சி பகுதிகளில் தேவைக்கேற்ப ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் மன்றத்திற்கு பொருள்

கொண்டு செல்லப்பட்டு தனியார் குடிநீர் லாரிகளுக்கு குடிநீர் விநியோகித்த அளவில் பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- ஒரு வருடத்திற்கான மொத்த செலவினத் தொகை ரூ.1,81,90,740/- என்பது 12 மாதங்களுக்கான தொகையாகும். நகராட்சியில் நிர்வாக அனுமதி தொகை ரூ.40.00 இலட்சம் வரை தனி அலுவலரே வழங்கும் விதி உள்ளதால் ரூ.40.00 இலட்சம் என்பது மூன்று மாதங்களுக்கு தேவையான தொகையாக இருப்பதால் ஒவ்வொரு முறையும் தொகை ரூ.40.00 இலட்சத்திற்கு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மேலும் இப்பணிகள் அனைத்தும் உரிய ஒப்பந்த விதிமுறைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தும் குடிநீர் பணியாளர், பொறியாளர் கொண்டு முறையாக ஆய்வு செய்து குடிநீர் வழங்கப்படும் இடங்களில் அப்பகுதிவாழ் மக்கள், குடியிருப்பு சங்கங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோரிடம் கையொப்பம் பெற்று அதனடிப்படையில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மனுதாரரால் குறிப்பிடும் தணிக்கை தடை பத்தி என்பது பல்வேறு பணிகள் குறித்தும், அப்பணிகளுக்குரிய கோப்புகளின் அடிப்படையில் தணிக்கை பத்திகள் வழங்கப்படுகிறது. இவற்றை தணிக்கை சம்மந்தமான ஆய்வுக் கூட்டங்கள் மாவட்ட தலைநகரங்களில் மாதாந்தோறும் ஏற்பாடு செய்யப்பட்டு மண்டல தணிக்கை இயக்குநர், தணிக்கை இயக்குநர் மற்றும் தணிக்கை ஆய்வர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மண்டல பொறியாளர் மற்றும் ஆணையர், பொறியாளர் நகரமைப்பு அலுவலர், சுகாதார அலுவலர், மேலாளர் போன்ற நகராட்சியின் முக்கிய பொறுப்புகளில் உள்ள பல்வேறு அலுவலர்களை கொண்டு கோப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு பதில்கள் தயாரித்து ஆய்வுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்ட கால சூழ்நிலை போன்றவற்றை கருத்தில் எடுத்து கொண்டு தணிக்கை பத்தி குறை நிவர்த்தி செய்யப்படுகிறது. குடிநீர் விநியோகம் போன்ற பொது மக்கள் சார்ந்த சேவை பணிகளில் உயர் அதிகாரிகளின் பின்னேற்பின் பேரில் கோப்புகளிலிருந்து சரியான விளக்கம் அளிக்கப்பட்டு தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- இத்தணிக்கை தடை பத்தியினை இம்மனுவில் குறிப்பிட்டுள்ள திரு.வி.அன்பழகன் என்ற பத்திரிக்கை ஆசிரியர் ஏற்கனவே பல்வேறு தணிக்கை தடை பத்திகளை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தணிக்கை தடை அதிகாரிகளை மிரட்டி அவற்றினுடைய நகல்களை பெற்று சம்மந்தப்பட்ட நகராட்சி துறை அதிகாரிகளிடம் பணம் பெறும் நோக்கில் அவ்வப்போது புத்தகங்கள் வெளியிடுவது, முறைகேடுகள் என அறிவிப்புகள் வெளியிடுவது என தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

- எனவே இத்தணிக்கைதடை பத்திகள் குறிப்பிடும் குற்றச்சாட்டுகள் என்பது அதற்குரிய கோப்புகள் மற்றும் தெளிவுரைகள் அளிக்கும் பட்சத்தில் அவற்றினை தணிக்கை கூட்டமர்வில் நீக்கம் செய்வது நடைமுறையில் இயல்பான ஒன்றாகும் என்று தெரிவித்துள்ளார்.

4) திரு.க.சிவகுமார் முன்னாள் பல்லவபுரம் நகராட்சி ஆணையாளர் திருப்பூர் மாநகராட்சியின் ஆணையாளராக இருக்கும் போது இம்மனு குறித்த 20.07.2020 நாளிட்ட அறிக்கையை அனுப்பியுள்ளார். அதில் திரு.கருப்பையாராஜா பொறியாளர் (ஆணையாளர் பொறுப்பு) பல்லவபுரம் நகராட்சி அவர்கள் அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துகளையே தமது அறிக்கையிலும் தெரிவித்துள்ளார். திரு.மதிவாணன் நகராட்சி ஆணையர் பல்லவபுரம் அவர்கள் தற்காலிக பணி நீக்கத்தில் இருப்பதால் அவரிடமிருந்து அறிக்கை வரப் பெறவில்லை.

5) இந்நேர்வில் தற்போது பல்லவபுரம் நகராட்சி ஆணையாளர் மற்றும் மனுதாரரான திரு.வி.அன்பழகன் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 13.12.2021 அன்று முற்பகல் 11.30 மணிக்கு நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.12.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 13.12.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரரான திரு.வி.அன்பழகன் ஆஜராகவில்லை. தற்போது தாம்பரம் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் பல்லவபுரம் அலுவலகத்தில் ஆணையாளர் பதவி இல்லை என்பதால் ஆணையாளர் சார்பில் செயற்பொறியாளர் 13.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்.

“பல்லவபுரம் நகராட்சியில் வார்டு எண்.11, 14 மற்றும் 15 ஆகிய வார்டுகளில், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கிய தொகை குறித்த தணிக்கை தடை பத்திகள் குறித்தும், அவை நிவர்த்தி செய்யப்பட்டனவா என்பது குறித்தும் எனக்கு தெரியவில்லை. எனவே, மேற்கண்ட நேர்வின் மீதான விரிவான அறிக்கையை 10 நாள் கால அவகாசத்திற்குள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

6) உள்ளாட்சி தணிக்கை குறிப்பிட்டு பதில் கொண்டுவராததால் விளக்கம் தர முடியவில்லை முழு அறிக்கையோடு 27.12.2021 அன்று வர அறிவுறுத்தி முறைமன்ற நடுவர் அவர்களால் ஆணையிடப்பட்டது. முறைமன்ற நடுவர் அவர்களின் ஆணைப்படி 27.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜரான நகராட்சி பொறியாளர் மற்றும் தணிக்கைப் பிரிவு இளநிலை உதவியாளரும் கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர்.

“2017-18 ஆண்டு பல்லாவரத்தில் ஏற்பட்ட குடிநீர் பிரச்சனையை சமாளிக்க வார்டு எண்.11, 14 மற்றும் 15 ஆகிய வார்டுகளில், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 181 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஒரு வருட கால ஒப்பந்தம் முடிந்த பின்னர், மேற்கண்ட வார்டுகளில் நிலத்தடி நீர் குறைவினாலும், அங்கு ஏற்பட்ட அவசர தேவையை முன்னிட்டும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கே ஒப்பந்தத்தை நீட்டித்து,

மேற்கண்ட வார்டுகளில் குடிநீர் வழங்க பல்லவபுரம் நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்தோ அல்லது தலைமைப் பொறியாளரிடமிருந்தோ எவ்வித அனுமதியோ அல்லது தொழில்நுட்ப அனுமதியோ (Technical Sanction) அல்லது பின்னேற்போ (ratification) பல்லவபுரம் நகராட்சியால் பெறப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஒரு வருட கால ஒப்பந்தம் முடிந்த பின்னர் மேலும் மூன்று மாத காலத்திற்கு மேற்கண்ட ஒப்பந்ததாரர் பழைய விலைப்புள்ளியில் குடிநீர் விநியோகம் செய்ய சம்மதித்தன் பேரில், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 31.03.2017 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து, இதற்கான நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என்று தெரிவித்தனர்.

7) மனுதாரரின் மனு, பல்லவபுரம் நகராட்சியின் அப்போதைய ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோரின் அறிக்கை மற்றும் தற்போதுள்ள பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பல்லாவரம் நகராட்சியில் உள்ள 42 வார்டுகளில் வார்டு எண்கள்.11, 14 மற்றும் 15 ஆகிய வார்டுகளில் ஏற்பட்ட குடிநீர் பிரச்சனையை சமாளிக்க 2016-17ம் நிதியாண்டிற்கு நகரமன்ற தீர்மானம் எண்.425 நாள்.29.02.2016க்கு மதிப்பீட்டு ரூபாய்.39.00 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகரமன்றத்திற்கு பொருள் கொண்டு செல்லப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆ.பாண்டியன் ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தீர்மானம் எண்.544 நாள்.03.03.2016ல் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் நகரமன்றத்தின் பதவிக்காலம் 26.10.2016ம் தேதியில் முடிவடைந்த நிலையில், பொது மக்களுக்கு குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோராமல், 2016-17 ம் ஆண்டு வழங்கப்பட்ட அதே விலை விகிதத்தில் 2017-18 ஆண்டிலும் பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு எந்தவித பின்னேற்பு ஆணையும் சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்களிடம் பெறப்படவில்லை. ஒரு வருடத்திற்கான செலவினத் தொகை ரூபாய்.1,81,90,741/- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக அனுமதி தொகை ரூபாய்..40.00 இலட்சம் வரை தனி அலுவலருக்கு அதிகாரம் உண்டு என்று குறிப்பிட்டுள்ளது. அப்படி பார்த்தாலும் ஒரு வருடத்திற்கு நான்கு காலாண்டு என்று வைத்து ரூபாய்..40,00,000/- என ரூபாய்.1,60,00,000/- (ஒரு கோடியே அறுபது லட்சம்) தான் செலவு, மீதமுள்ள ரூபாய்.1,81,90,740 - ரூபாய்.1,60,000 = ரூபாய்.21,90,740/- க்கான செலவினம் காட்டப்படவில்லை. இச்செயல்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்தோ அல்லது தலைமை பொறியாளரிடமிருந்தோ எவ்வித அனுமதியோ அல்லது தொழில்நுட்ப அனுமதியோ அல்லது பின்னேற்போ நகராட்சியால் பெறப்படவில்லை. 2017-2018-ன் முதல் காலாண்டு முடிந்த பிறகும் ஒப்பந்தப்புள்ளிகள் கோராமல், அதனையே தொடர்ந்து செய்தது உள்நோக்கம் கொண்டதாகவும், ஒப்பந்ததாரரை ஊக்குவிப்பதாகவும் காணப்படுகிறது. It is clear case of favouritism, abuse of the special officer's powers and naked violation of rules and regulations by the officials involved in the petitioner's allegations. The adverse observations of the Local Fund Audit recorded for the

financial year 2017 – 2018 add further strength to the complaints of the petitioner. இதுபோன்ற செயல்களின் மூலம் அதிகாரிடம் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தமது விருப்பம் போல் செயல்பட்டுள்ளதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இப்பொருள் குறித்து தணிக்கை பத்தியிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இச்செயல்பாடுகளில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது சட்ட விதிகளுக்குட்பட்டு துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. வி.அன்பழகன்,
13/19, மல்லியம் நரசிம்மன் நகர்,
பூந்தமல்லி, சென்னை 600 056.

2) ஆணையாளர்,
தாம்பரம் மாநகராட்சி,
பல்லாவரம் அலுவலகம்.
சென்னை.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.